

கழகத் தலைவர் அவர்களின் முன்னாள் உதவியாளர் ஹரி கிருஷ்ணன் அவர்கள் உடல் நலக்குறைவால் மறைவெய்திய செய்தி அறிந்து கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கழகத் தலைவர் அவர்களுடன் சென்று அன்னாரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் தெற்கு ஒன்றியம் கிணார் ஊராட்சி மன்ற தலைவர். திருமதி. தேவி அரசு அவர்களின் மாமியார் அஞ்சா அம்மாள் 16 ஆம் நினைவு நாளையொட்டி அவருடைய திருவுருவப் படத்திற்கு முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாலை வைத்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்டச் செயலாளர் க.சுந்தர், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், ஒன்றிய செயலாளர் பொன்சிவக்குமார், உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### தென்மாநில முதல்வர்கள் மாநாட்டில் – தமிழக முதல்வர்

# ‘மேகதாது அணை கட்ட விட மாட்டோம்’ எனப் பேசுவதற்கு அஞ்சுவதா?

## சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!



நெல்லை, ஆக. 24 – முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு தனது எக்ஸ் வலை தளத்தில் கூறியிருப்பதாவது:

சென்னை கோவளத்தில் நடைபெற்ற தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில் பேசிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தென் மாநிலங்களில் நிலுவையில் உள்ள நதி நீர் பிரச்சினைகளை பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க முன்வர வேண்டும் என்று கூறியிருப்பது தமிழக முதல்வரின் பலவீனத்தை பிரதிபலிக்கிறது.

அதே மாநாட்டில் பேசிய கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் ”நீர் பங்கீடு என்பது ‘நீர் ஒத்துழைப்பு என மாற வேண்டும் என்றும் மேகதாது அணை தமிழகத்திற்காக கட்டப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார். பெங்களூரு குடிநீருக்கு 5.டி.எம்.சி.தண்ணீர் தவிர மீதி அனைத்தையும் தமிழ்நாட்டுக்கு திறந்து விடுவோம் என்பதை ஒன்றிய அமைச்சர் அமித்ஷா முன்னிலை யில் உத்தரவாதமாக அளித்துள்ளோம் என்று அவர் பேசியது அனைத்தும் வஞ்சக வார்த்தை CMsir?

தற்போது உச்சநீதிமன்றம் உத்தரவிட்டும் தமிழகத்துக்கு தண்ணீர் திறக்காத கர்நாடக முதல்வர் உள்துறை அமைச்சர் மூலம் சதி திட்டம் தீட்டி மிரட்டுவதற்கு முதல்வர் ஜோசப் விஜய் துணை போகலாம். திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட கட்சிகளும் தமிழக மக்களும் ஒருபோதும் இதை அனுமதிக்க மாட்டோம் என்பதை தெரிந்து கொள்ளுங்கள் CMsir?

மாநாட்டில் பேசிய தமிழக முதல்வர் ”மேகதாது அணை கட்ட விடமாட்டோம் என்று பேசுவதற்கு அஞ்சி நடுங்கி அவர்களின் மிரட்டலுக்கு பயந்து விவாதிக்கலாம், பேசலாம் என்ற தொனியில் பேசி இருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது!

முல்லைப் பெரியார் அணை பாதுகாப்பு பராமரிப்பு மற்றும் அணை நீர் திறப்பு உட்பட அனைத்து நிர்வாகமும் நமது மாநில கட்டுப்பாட்டில் இருந்ததை எம்.ஜி.ஆர்.அவர்கள் முதல்வரானதும் தமிழக காவல்துறையை வாபஸ் பெற்று, கேரளா காவல் துறை பாதுகாப்புக்கு மாற்றிய நாள் முதல் இன்று வரை முல்லைப் பெரியாறு அணை சார்ந்த துன்பங்களை தமிழக மக்கள் அனுபவித்து வருகிறோம்.அதன் தொடர்ச்சி தான் நேற்று முன்தினம் மாநாட்டில் பேசிய கேரளா முதல்வர், முல்லைப் பெரியார் அணைக்கு புதிய அணை கட்ட வேண்டும் என்ற சர்ச்சையை கிளப்பியுள்ளார்.

அதேபோல் தற்போது தமிழக முதல்வர் முதல்வராகி தனது கர்நாடக நண்பர் வெங்கட் கே.நாராயணாவோடு சேர்ந்து மேகதாது அணை கட்ட துடிக்கும் கர்நாடகா அரசுக்கு துணை நின்று, தமிழக மக்களுக்கு துரோகம் செய்ய நினைக்கும் உங்களை தமிழகம் மன்னிக்காது CMsir?

கலைஞர் அவர்கள் அமைத்த ”காவிரி தீ ர்ப்பாயம் தீர்ப்பின் அடிப்படையில் உச்சநீதிமன்றம் ”காவிரி மேலாண்மை வாரியமாக தந்த தீர்ப்பை தட்டிப் பறித்து காவிரி மேலாண்மை ஆணையமாக மாற்றி தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்த காங்கிரஸ்பா.ஜ.க.வோடு தமிழகம் முதல்வரும் சேர்ந்து மேகதாது அணை கட்டிவிடலாம் என்று உங்கள் கனவு, தி.மு.க.தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இருக்கும் வரை ஒருபோதும் நடக்காது, தமிழக மக்களோடு சேர்ந்து உங்களை ஆட்சியிலிருந்து ஓட ஓட விரட்டியடிப்பார் CMsir?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### தாய்மாமன் தங்க மோதிரத் திட்டத்தில்

# தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் தங்கத்தை எப்படி கொள்முதல் செய்ய முடியும்?

## சட்டப் பேரவையில் மனோஜ் பாண்டியன் கேள்வி!



சென்னை. ஆக.24- தமிழக சட்டப் பேரவையில் நேற்று சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, சட்டத் துறைகள், மின்வாரியம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு ஆலங்குளம் தொகுதி உறுப்பினர் மனோஜ் பாண்டியன் (திமுக) பேசியதாவது: தாய்மாமன் சீர்’ திட்டத்தின் கீழ் தங்கம் கொள்முதல் செய்வதற்கான டெண்டர் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் மூலம் கோரப்பட்டுள்ளது.

இந்த நிறுவனமானது மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கும், மருத்துவக் கட்டிடங்களைக் கட்டுவதற்கும் மட்டுமே சட்டப்படி உருவாக்கப்பட்ட ஒரு கழகம். தங்கத்தை ‘மருத்துவ உபகரணம்’ என்று வகைப்படுத்தி டெண்டர் கோருவது இந்த நிறுவனத்தின் அடிப்படை நோக்கத்திற்கு எதிரானது மற்றும் உச்ச நீதிமன்ற தீர்ப்புகளுக்கு முரணானது.

இதற்கு பதிலளித்த அமைச்சர்: தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் முதல்வர் அறிவித்த பின்பு எந்த துறை மூலம் இந்த திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது. மருத்துவத் துறையே இந்த திட்டத்தை அமல்படுத்தும். மேலும், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் மூலம் தங்கத்தை கொள்முதல் செய்யும் ஏற்பாடுகளை செய்து வருகிறோம். தங்கத்தை வாங்குவதற்காக ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

### பேராவூரணி தொகுதியில் – சரபேந்திர ராஜபட்டினம் பாப்பாங்கண்ணி ஆறு அருகே

# ஆற்றின் முகத்துவாரத்தில் தடுப்பணை கட்டித்தாரீர்!

## சட்டப்பேரவையில் – பேராவூரணி என்.அசோக்குமார் வலியுறுத்தல்!



சென்னை, ஆக. 24- பேராவூரணி தொகுதி கழக எம்.எல்.ஏ., பேராவூரணியில் கடற்கரையை ஒட்டி ஓடும் சரபேந்திர ராஜபட்டினம் பாப்பாங்கண்ணி ஆற்றின் முகத்துவாரத்தில் தடுப்பணை கட்டித் தருமாறு கோரிக்கை விடுத்தார்.

சட்டப்பேரவையில் அவர் குறிப்பிட்டதாவது:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி சட்டமன்றத் தொகுதிக்கட்பட்ட சரபேந்திரராஜபட்டிணம் பாப்பாங்கண்ணியாறு அருகே தடுப்பணை, வில்லுணிவயல், அம்புலியாறு அருகே தடுப்பணை குப்பதேவன் திருவதேவன், நரசிங்க காவேரி ஆறு அருகே தடுப்பணை. பண்ணவயல், அக்கினியாறு அருகே தடுப்பணை அமைக்க வேண்டியது அவசியம் ஆகும்.

“காலநிலை மாற்றத்தின் காரணமாக ஆற்றின் துவர முகாரத்தின் வழியாக 2 அல்லது 5 கி.மீ வரை கடல் நீர் உட்புகுவதால் குடிநீர் மற்றும் விவசாய நிலங்கள் அதிகளவில் பாதிக்கப்படுவதால் அரசு இந்தாண்டே இந்த நான்கு தடுப்பணைகளையும் அமைத்துத் தர வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

### முன்னாள் அமைச்சர் மா. சுப்பிரமணியன் தலைமை! முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முன்னிலை!

### ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி இல்லத் திருமண விழா

# கழகத் தலைவர் - எதிர்க்கட்சித் தலைவர் மணமக்களை வாழ்த்துகின்றனர்!

## டி.ஆர்.பாலு – ஆர்.எஸ்.பாரதி – ஆ.ராசா – ஓ.பன்னீர்செல்வம் – கழக முன்னணியினர் பங்கேற்பு!



திருவள்ளூர் ஆக. 24- சென்னை தெற்கு மாவட்டக் கழகம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி மற்றும் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் வீர.கனிமொழி ஆகியோரது இல்லத் திருமண விழா, வரும் 26-8-2026 புதன்கிழமை மாலை 6 மணியளவில் வானகரம் ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸில் நடைபெறுகிறது.

திருமண விழாவிற்கு சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார். திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர், மதுரவாயில் தெற்கு பகுதி கழகச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி, முன்னாள் அமைச்சர் பா.பெஞ்சமின், மதுரவாயில் வடக்கு பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், மாவட்டக் கழகப் பொருளாளர் வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அருணாச்சலம் உள்ளிட்டோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இத்திருமண விழாவில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்கள் வீர.குடியரசி - ரா.கார்த்திகேயன் ஆகியோரை வாழ்த்துகின்றனர்.

மேலும், கழகப் பொருளாளரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் முனைவர் எஸ்.ஜெகத் ரட்சகன், தலைமைக்கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், முன்னாள் அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பி.கே. சேகர்பாபு, தா.மோ.அன்பரசன், முனைவர் கோ.வி.செழியன் உள்ளிட்ட எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், தமிழச்சி தங்கபாண்டியன், இரா.கிரிராஜன், அன்பகம் கலை, ஐ.பரந்தாமன், ப.தாயகம் கவி, பூச்சி முருகன், எஸ்.ஆர்.ராஜா, நே.சிற்றரசு, ஆர்.டி.சேகர், ஆ.கிருஷ்ணசாமி, இ.கருணாநிதி, பத்மநாபன், சென்னை மேயர் பிரியா ராஜன், திருத்தணி எஸ்.சந்திரன், வல்லூர் ரமேஷ் ராஜ், டி.ஜே. கோவிந்தராஜன், வி.ஜி. ராஜேந்திரன், பா. ரங்கநாதன், அரவிந்த், ரமேஷ், ஜோசப் சாமுவேல், கே.பி. பி.சங்கர், பிரபாகர் ராஜா, காசி முத்துமாணிக்கம், பிடி பாண்டி செல்வம், க. தனசேகரன், பாலவாக்கம் சோமு, வேளச்சேரி மணி மாறன், ரத்தின லோகேஸ்வரன், குணசேகரன், தா. விஸ்வநாதன், மு.மனோகரன், வாசுகி பாண்டியன், தமிழ் பிரசன்னா, காமராஜ், படப்பை மனோகரன், பத்மபிரியா, சி. ஜெரால்டு, நடுக்குத்தகை ரமேஷ், பி.கே.மூர்த்தி, பிஜே.மூர்த்தி உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். நிகழ்ச்சியின் முடிவில் வீரா.தமிழரசன் என்கிற யோகிராம் நன்றி கூறுகிறார்.

### கேரளத்தில் ஓணம் பண்டிகையை முன்னிட்டு

# சென்னை விமான நிலையத்தில் பயணிகள் கூட்டம்!

## கட்டணம் பல மடங்கு உயர்வால் பொதுமக்கள் கடும் அதிர்ச்சி!

சென்னை, ஆக.24- கேரளத்தில் ஓணம் பண்டிகையை முன்னிட்டு சென்னையில் இருந்து கொச்சி, திருவனந்தபுரம், கோழிக்கோடு, கண்ணூர் விமானங்களில் பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது. இதனால் விமான கட்டணமும் பல மடங்கு உயர்ந்துள்ளது. பயணிகள் கடும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்னர். கேரள மாநிலத்தில் ஓணம் பண்டிகை வரும் 26ம் தேதி விமரிசையாக கொண்டாடப்பட உள்ளது. தமிழகத்தில் பொங்கல் பண்டிகை கொண்டாடுவது போன்று கேரளத்திலும் ஓணம் விமரிசையாக கொண்டாடப்படுகிறது. கடந்த 16ம் தேதியே இந்த பண்டிகை கொண்டாட்டம் தொடங்கி விட்டது. இதனால் கேரளா முழுவதும் விழாக்கோலம் பூண்டுள்ளது.

இந்நிலையில், வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் கேரள மாநிலத்தவர்கள், தங்கள் சொந்த ஊர்களுக்கு சில தினங்களுக்கு முன்பே சென்று, குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுடன் இந்த பண்டிகையை கொண்டாடுவது வழக்கம். அதன்படி சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் கேரள மாநிலத்தவர்கள், தங்களது சொந்த ஊர்களுக்கு செல்ல தொடங்கியுள்ளனர். அவர்களுக்காக சிறப்பு ரயில்கள், பஸ்கள் இயக்கப்படுகின்றன. அவற்றில் பலர் பயணித்து வருகின்றனர். அதே நேரத்தில் ரயில், பஸ்களில் நேரம் அதிகமாகும் என்பதால் சிலர், விமானங்களிலும் பயணித்த வண்ணம் உள்ளனர்.

இந்நிலையில், சனி, ஞாயிறு விடுமுறை நாட்களுடன் ஓணம் பண்டிகையை சிறப்பாக கொண்டாடுவதற்கு, சென்னையில் இருந்து கொச்சி, திருவனந்தபுரம், கோழிக்கோடு, கண்ணூர் ஆகிய இடங்களுக்கு நேற்று முதலே ஏராளமானோர் விமான பயணங்களை மேற்கொண்டுள்ளனர். பலரும் விமானத்தில் பயணிக்க தொடங்கியுள்ளதால் சென்னை விமான நிலையத்தில் பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது. இதனால் விமான கட்டணங்களும் பல மடங்கு அதிகரித்துள்ளது. பயணிகள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர். ஆனாலும் பண்டிகையை உற்சாகத்துடன் கொண்டாட கட்டணத்தை பொருட்படுத்தாமல், தங்கள் பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

அதே நேரத்தில், பண்டிகை காலங்களில், கேரள மாநிலத்துக்கு கூடுதல் விமானங்களை சென்னையில் இருந்து இயக்க வேண்டும் எனவும் பயணிகள் கோரிக்கையும் விடுத்துள்ளனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் கழகத்தின் ‘வேர்களைத் தேடி’ என்ற தலைப்பில், கழகத்தின் ஆணிவேராகத் திகழும் கிளைக் கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வின் தொடர்ச்சியாக ஆர்.கே.பேட்டை வடக்கு ஒன்றியம் – அம்மையார் குப்பம் கிளைக் கழக நிர்வாகிகளை மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், சந்தித்து உரையாடினார். உடன் ஆர்.கே.பேட்டை வடக்கு ஒன்றியச் செயலாளர் சி.என்.சண்முகம், நிர்வாகிகள் எஸ்.ஆர்.செங்குட்டுவன், பி.கே.சீனிவாசன், ஜெய்சங்கர், பெருமாள், ரமேஷ், அம்மையார்குப்பம் கிளைசெயலாளரகள் ஏ.கே.மணி, தியாகராஜன், எஸ்.எஸ்.குமார், புஷ்பநடேசன், யாகவல்லி பழனி, மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




அரியலூர் மாவட்டம் தா.பழுர் கிழக்கு ஒன்றியம் கன்டியங்கொல்லை கிராமத்தில் நினைவில் வாழும் முன்னாள் செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர், மொழிப்போர் தியாகி க.சொ.கணேசன் அவர்களின் 21 ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் செயங்கொண்டம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்ட துணைச் செயலாளர் மு.கணேசன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகரகழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.